# பாரதி விருது

## 2014



கடந்த 33 ஆண்டுகளாகத் தொடர்ந்து பாரதி விழாவை ஈரோடு நகரில் சிறப்பாக நடத்திவருவதாலும் தனது சொற்பொழிவுகளின் மூலம் கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேல் பாரதியின் கருத்துக்களையும் சிந்தனைகளையும் மக்களிடம் எடுத்துச் சென்றதைக் கருதியும் ‘ பாரதி இளைஞர் மன்றம் ’ என்ற அமைப்பைக் கால்நூற்றாண்டு காலம் தொடர்ந்து ஈரோட்டில் நடத்தி வந்ததை வைத்தும், ஈரோடு நகரில் பாரதியின் இறுதிப்பேருரை நிகழ்த்தப்பட்ட கருங்கல்பாளையம் நூலகத்தைத் தரம் உயர்த்தி அவ்விடத்தில் அரசின் சார்பில் ரூ. 20 லட்சம் செலவில் பாரதி

மணிமண்டபம் கட்டக் காரணமாக இருந்ததை அங்கீகரித்தும் இன்னும் இது போன்ற பிற சமூகப்பணிகளை மதிப்பிட்டும் த. ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு கோவை ' பாரதி பாசறை ' அமைப்பின் சார்பில் 14.11.2014 ஆம் தேதி ரூ 50,000 பொற்கிழியுடன் கூடிய ' பாரதி விருது ' வழங்கி கௌரவிகப்பட்டது.

இவ்விருதினை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை நீதியரசர் வெ. இராம சுப்பிரமணியன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் கவிஞர் மரபின்மைந்தன் ம. முத்தையா, சொற்பொழிவாளர் பாரதி கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.



# பாரதி விருது

## பாரதி திருவிழா 2014

விழிதோறும் கனலின் விளக்கம்

பாரதி பாசறை கோவை வழங்கும்

டிசம்பர் 14

**பெறுபவர்: திரு. த. ஸ்டாலின் குணசேகரன்**

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்னும் மகாகவியின் இலக்கண வரிகளுக்கு இலக்கியமாய் எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் வழி சமூகத்திற்கு ஒளி சேர்த்து வருபவர் திரு.த.ஸ்டாலின் குணசேகரன்.

பத்து வயதில் 'மாணவர் முன்னேற்ற சங்கம்' தொடங்கிய இவர் அதைத் தொடர்ந்து உருவாக்கிய 'பாரதி இளைஞர் மன்றம்' வெள்ளி விழாக் கண்டது.

தான் உருவாக்கிய பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து 'மக்கள் சிந்தனைப் பேரவை' என்னும் அமைப்பை பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவினார்.

முப்பதாண்டுகளுக்கும் மேலாக சமூக மேம்பாட்டுக்கு வழி வகுக்கும் சிறந்த உரையாளராய், எழுத்தாளராய், செயல்வீரராய் இயங்கி வருகிறார்.

'விடுதலை வேள்வியில் தமிழகம்' எனும் தலைப்பில் தமிழகமெங்கும் பயணம் செய்து, 1200 பக்கங்களில் இரண்டு பாகங்களாக இவர் வெளியிட்ட நூல்கள் மிகப்பெரிய வரலாற்று ஆவணமாய் திகழ்கின்றன.

'தேச விடுதலையும் தியாகச் சுடர்களும்', 'வரலாற்றுப் பாதையில்' ஆகிய தலைப்புகளில் இவர் எழுதிய நூல்களும் 'மெய்வருத்தக் கூலி தரும்' என்னும் நூலும் குறிப்பிடத்தக்கவை.

வாசிக்கும் பழக்கத்தை தீவிரப்படுத்த இயக்கம் நிறுவி எழுச்சி மிக்க முறையில் செயல்பட்டும் வருகிறார்.

ஈரோட்டில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக பாரதி விழாவை இடைவிடாமல் நடத்தி வருவதோடு பாரதி பணியில் சிறந்து விளங்குபவர்களுக்கு பாரதி விருதும் வழங்கி வருகிறார்.

கடந்த 13 ஆண்டுகளாக நூறு சதவிகிதம் தேர்ச்சி பெறவைக்கும் ஈரோடு மாவட்ட அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு எழுச்சி மிக்க பாராட்டு விழாவை நடத்தி வருகிறார். 2014ஆம் ஆண்டு மட்டும் 1260 ஆசிரியர்கள் பாராட்டப் பெற்றுள்ளனர்.

ஈரோடு புத்தகத் திருவிழா இவருடைய அயராத உழைப்பின் அற்புத சாதனையாகும்.

இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட விருதுகள் இவரது உழைப்பின் வியர்வையை ஒற்றுகிற கைக்குட்டைகளாய் இவரை வந்தடைந்துள்ளன.

இவருக்கு 13.12.2014 அன்று கோவை கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழங்கிப் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாரதி கனவு கண்ட புதிய பாரதத்தை வடிவமைக்க தன்னையே உளியாகத் தந்திருக்கும் திரு.த.ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு 'பாரதி விருது' தந்து சிறப்பிப்பதில் கோவை பாரதி பாசறை பேருவகையும் பெருமிதமும் கொள்கிறது.

அவர்தம் பணிகள் மேலும் பொலிவுற வாழ்த்துகிறது.

பாரதி பாசறை, 17, செங்குப்தா வீதி, ராம் நகர், கோயம்புத்தூர் – 641 009. தொலைபேசி : +91 422 2230930 bharathipasaraicbe@gmail.com